கவியுலகப் பூஞ்சோலையின்...

# செவ்வந்தி மேலே ஒரு பனித்துளி


## ரசிகுணா

தொகுப்பாசிரியர்



## தமிழ்நெஞ்சம்

59, rue des Entrechats , 95800 Cergy - France

கவியுலகப் பூஞ்சோலையின்...
செவ்வந்திமேலே ஒரு பனித்துளி
ஹைக்கூ தொகுப்பு

வெளியீடு : கவியுலகப் பூஞ்சோலை, தமிழ்நாடு, இந்தியா

நூல் வடிவமைப்பு செய்து பதிப்பிப்பவர் :
தமிழ்நெஞ்சம் அமின், பிரான்சு
email : editor@tamilnenjam.com

முதல் பதிப்பு : பிப்ரவரி 2020
பக்கங்கள் : 80
அளவு : டெம்மி 1 / 8
விலை : 100 ₹ (INR)



# அணிந்துரை

தமிழ் ஹைக்கூ கவிதைகள் ஒரு நூற்றாண்டு கடந்து கவிதை உலகில் நல்லதோர் தடம் பதித்து வருகிறது. முகநூல் வழி குழுமங்கள் தொடர்ந்து நடத்தி வரும் ஹைக்கூ போட்டிகள், ஆண்டு விழாக்களில் வெளியாகும் ஹைக்கூ தொகுப்புகள் மற்றும் ஹைக்கூ கவியரங்கங்கள் ஒரு செழுமையான வளர்ச்சியை எட்டியிருக்கிறது என்றால் அது மிகை அல்ல.

கவியுலகப் பூஞ்சோலை தமது ஆண்டு விழாக்களில் ஹைக்கூ தொகுப்பு நூல் வெளியிட்டு வருவது தமிழ் பெற்ற பேறு என்றே கூறலாம். உலகெங்கும் உள்ள நூற்றுக்கணக்கான ஹைக்கூ கவிஞர்களை ஒன்று திரட்டி அவர்களது ஆகச் சிறந்த ஹைக்கூ கவிதை ஒருவருக்கு ஒன்று என நிழற்படத்துடன் “செவ்வந்தி மேலே ஒரு பனித்துளி“ என தலைப்பிட்டு மாபெரும் ஹைக்கூ தொகுப்பினை வெளியிட்டிருப்பது ஹைக்கூ உலகில் ஒரு சரித்திர நிகழ்வாகக் கொள்ளலாம். இதற்குப் பின் மிகப்பெரிய உழைப்பு இந்தக் குழுமத்தின் நிர்வாகி மற்றும் பொறுப்பாளர்களைச் சேர்ந்தது.

மெல்லிய காற்றினில்
திசை திரும்பும் குடைக்கு மேல்
முதல் துளியின் சத்தம்

இது புத்தகத்தில் இடம்பெறும் முதல் துளி. ஒரு காட்சியைப் படிமமாக்கி இங்கே நமக்கு தருபவர் ஹைக்கூ கவிஞர் ரசிகுணா அவர்கள். மெல்லிய காற்று வீசுகிறது. குடை பிடித்து செல்லும் போது சற்று திசை திரும்பும் அந்தக் குடையின் மீது முதல் துளி விழுகிறது. அந்த சத்தம் ரசிப்போரின் மனநிலையை இயற்கையுடன் இணைக்கிறது. இந்த முதல் துளி மழைத்துளியாகவும் இருக்க லாம் அல்லது மெல்லிய காற்றில் மரத்திலிருந்து விழுந்த பனித்துளியாகவும் இருக்கலாம். இதன் சத்தம் குடை பிடித்துச் செல்பவரின் மனத்தில் மகுடியாய் இசைக்கிறது.

பனித்துளியில் பிரபஞ்சம்
தாங்கிப் பிடிக்கிறது
ஒற்றைப் பூவிதழ்

- பிச்சிப்பூ

காலை உறைபனி
கூடவே ஒட்டியிருக்கிறது
இலையோடு நத்தை

- விஜிதா

மெல்லிய பூங்காற்று
இடம் விட்டு இடம் மாறுகிறது
இதழ்களில் பனித்துளி

- ஜிவிதன்

இயற்கையின் படைப்பின் ரகசியத்தைக் கூறும் ஹைக்கூவாக தமிழ்நெஞ்சம் அமின் அவர்களின் ஹைக்கூ கவிதையைக் கூறலாம் ...

பூவின் மேலிருந்து விழும்
பனித்துளிகளையும்
தாங்கிக்கொள்ளும் பூமி

- தமிழ்நெஞ்சம் அமின்

இயற்கையின் மென்மை அதனை ஆராதிக்கும் பண்பில் நம் நெஞ்சில் நிம்மதியை விதைத்துச் செல்கிறது என்பது நிதர்சன உண்மை. எனவேதான் ஜப்பானிய பௌத்த துறவிகள் ஜென் தத்துவத்தை முன்னிறுத்தி ஹைக்கூ கவிதைகளைப் படைத்தனர். ஜென் மனநிலையில் எழுதப்பட்ட ஹைக்கூ கவிதைகளை இந்த தொகுப்பில் காண முடிகிறது...

மூங்கில்காடு
இசைகேட்டு தலையாட்டுகிறது
ஊர்ந்து செல்லும் நத்தை

- கவிமணி கவிநுட்பம்

குளத்தில் நிலா
சலனமற்று நிற்கும்
கரையோர மரங்கள்

- முகிலை பாஸ்ரீ

புல்வெளியில் நடக்க
பாதம் நனைக்கிறது
அதிகாலைப் பனி

- கரு கிருஷ்ணமூர்த்தி

ஹைக்கூ கவிதைகளில் காட்சிப் பதிவுகள் பன்முக நோக்கோடு அமைவதில் சிறப்புத்தன்மை இருக்கத்தான் செய்கிறது. தமிழ் ஹைக்கூ கவிதைகளில் கவிஞர்கள் காட்சி அமைப்புகளை அப்படியே அமைத்து எழுதுவதில் வல்லவர்களாக உள்ளார்கள். இக்கவிதைகள் நம்மை ஆரத் தழுவி இதயத்தைத் தொட்டுச் செல்கின்றன என்பது முற்றிலும் உண்மை ...நீங்களும் இந்தக் கவிதைகளை படித்து ரசியுங்கள்...

கார்முகிலைக் கண்டு
கண்மூடுவதும் திறப்பதுமாய்
பனிப்பொழிவில் பூனை

- முனைவர் வெ.புகழேந்தி

மூடுபனிக்காலம்
பார்வைக்குப் புலப்படவில்லை
சத்தமிடும் நாய்

- தி.பிரியங்கா

பனிபடர்ந்த ரோஜா
நின்று நிமிர்ந்து பார்க்கும்
ஈர நத்தை

- பொம்மிடி மோகன்தாஸ்

ஒற்றைப் பனித்துளிக்கு
ஏங்குகிறது புல்வெளி
கடுங்கோடைத் தாகம்

- வெற்றிப்பேரொளி

பனித்துளிகளைச் சுகமான சுமைகளாய் கொண்டுள்ள செவ்வந்திமலர்கள் மானுடத்தை தன்வயப்படுத்தும் மகரந்தத்தை யும் கொண்டுள்ளது என்றும் அதனைப் பரிமாறியது எனவும் இதற்கு வண்டு மற்றும் காற்றின் அலைகள் துணைபுரிந்தன என்பதை உள்ளீடாக வைத்துள்ள அற்புத வரிகளில் ஹைக்கூ படைத்துள்ளார் கவிஞர் இளையபாரதி கந்தகப்பூக்கள். மேலும், மோனைக்கூ என்ற புதிய உத்தியை அறிமுகப்படுத்திய கவிஞர் இவர். இவரது படைப்புகள் இருப்பதை உள்ளபடியே கூறுவதை நாம் காணலாம்...

மணம் வீசியழைத்து
மகரந்தம் பரிமாறியது
செவ்வந்திப்பூ

- இளையபாரதி கந்தகப்பூக்கள்

தமிழ் ஹைக்கூ கவிதைகளில் மனிதநேயம் மற்றும் சமூக அவலம் காட்சிப் பதிவாக அல்லது ஒரு செய்தியாக மக்களிடம் சேர்க்கும் தன்மையைக் காணலாம்.

தமிழ்க்கலாச்சாரம், சூழல், மண்சார்ந்த மரபு, அவலம் இவற்றை அதிக அளவில் கவிஞர்கள் தமது தமிழ் ஹைக்கூ கவிதைகளில் எழுதி வருவது காலத்தின் கட்டாயம் என்றே கருத வேண்டும். இயற்கை, ஜென் தத்துவம் மட்டுமே ஹைக்கூவின் கருக்களாக இருந்த தன்மையை உடைத்தெறிந்து இந்தச் சமூகத்துக்கு மனிதநேயக் கருத்துகளை அள்ளித் தெளிக்கின்றன தமிழ் ஹைக்கூ கவிதைகள். ஒரு நூற்றாண்டு கண்ட தமிழ் ஹைக்கூ கவிதைகள் நாட்டுக்கும் வீட்டுக்கும் நன்மை பயக்கும் தன்மை கொண்டவர்களா இருக்கின்றன.

இத்தகு ஹைக்கூ கவிதைகளை செவ்வந்திமேலே ஒரு பனித்துளி ஏந்தி நமக்கெல்லாம் சிந்தனைக்கு வித்திட்டுச் செல்கிறது என்பது பாராட்டுக்கு உரியது. வாருங்கள் மனித நேயம், அவலம், மற்றும் சமூக நீதி கருத்துகள் கொண்ட ஹைக்கூ கவிதைகளை படித்து அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்வோம்...

அடிக்கடி நீர்தெளித்து
வாடிப்போயிருக்கும்
பூக்காரி முகம்

- முகம்மது அலவி

பிள்ளையின் பெருமையைப்
பேசிக்கொண்டிருக்கிறார்கள்
முதியோர் இல்லத்தில்

- லஷ்மி கார்த்திகேயன்

முளைத்த நாற்று
கத்திமுற்றக் காத்திருக்கின்றன
பசித்த வயிறுகள்

- அன்புச்செல்வி சுப்புராஜு

ஹைக்கூவின் புரிதல்களை இன்னும் பட்டியலிட்டுக் கொண்டே செல்லலாம். உலகக் கவிதை வரலாற்றில் இது தமிழ் ஹைக்கூக்களின் காலம் என்றே கூறலாம். தமிழ் ஹைக்கூ கவிதைகள் பல உலக மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்யப்படுகின்றன என்பது நமக்கு மகிழ்வளிக்கிறது.

காலம் கடந்து நிற்கும் தமிழ் ஹைக்கூ கவிதைகளில் அறிவியல் பூர்வமான அணுகுமுறை மேலோங்கி நிற்பதை வரவேற்பவர்களில் நானும் ஒருவன்.

அனிச்சை செயலினை மனிதனுக்கு இயற்க்கை சொல்லித்தரும்பாடங்களில்ஒன்றுஎன்றுஇருபதுஆண்டுகளுக்கு முன்னரே எழுதிய எனது ஹைக்கூ கவிதை ஆங்கிலம் மற்றும் ஜப்பானியமொழியில்மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.உங்களோடு பகிர்ந்துகொள்வதில் மகிழ்கிறேன்.

விட்டுக்கொடுக்கும்
பண்பை வளர்த்தன
ஒற்றையடிப்பாதைகள்

- கா.ந.கல்யாணசுந்தரம்

செவ்வந்திமேலே ஒரு பனித்துளி நூலிலும் இத்தகு அறிவியல்கண்ணோட்டத்தில்அமைந்துள்ளஹைக்கூகவிதைகளை சுவாசிப்பதில் நமக்கு வளமான வாழ்வு அமையும்...

பனிக்கால விளக்குகள்
நகரத்தின் பாதையெங்கும்
ஒளிப்பாளங்கள்

- முனைவர் ம.ரமேஷ்

தொலைதூரப் பனைமரம்
பெரிதாய்த் தெரிகிறது
புல்லின்நுனி பனித்துளியில்

- காரைக்குடி கிருஷ்ணா

மலைவாழ் குருவி
தனிமையில் பாடுகிறது
துணையாக எதிரொலி

- மித்ரா கவிமுத்து

ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கும் மானிடத்தின் இதயத்தில் அமுதமாகஒருமெல்லியநீரோடைபிறக்கிறது.இந்தத்தீராநதியில் மிதந்து வரும் ஏக்கம், சலனம், மெல்லிய உணர்வுகள்... அடடா எந்த அளவுகோலை வைத்து நாம் அளவிட முடியும். இமயமாய் எழுந்து நிற்கிறதே அத்தகு படைப்புகள்... அப்படியாக நான் ரசித்த சில ஹைக்கூ கவிதைகள் உங்களோடு வாசித்து மகிழ்கிறேன்...

மார்கழிப் பனிப்பொழிவு
கசிந்து போர்வையாகிறது
புல்லாங்குழலிசை

- அன்பழகன் ஜி

விறகு அடுப்பு
கண்ணீர் கசியவைக்கும்
அம்மாவின் நினைவு

- ஆத்தூர் சாகுல்

மௌனமான காட்டில்
இசைக்கத் தொடங்கின
மூங்கில்கள்

- நிர்மலா சிவராசசிங்கம்

வீழ்த்திய பூக்களை
புரட்டிப் போடுகின்றது
அடுத்த காற்று

- அருண்மயூ

புயற்காற்றிலசையும் மரங்கள்
வேறிடம் நோக்கிச் செல்கின்றன
கூடிழந்த பறவைகள்

- தனா சர்மா

இப்படியே இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள அத்தனைக் கவிஞர்களின் ஹைக்கூ கவிதைகளுக்கும் நாம் சிறப்பு அடையாளம் காட்டி மகிழலாம். படிமம், உள்ளீடுகள், உயிர் இரக்கச் சிந்தனை, மனிதநேயம், சமூக அவலம், இயற்கை என பல்வேறு பொருள்களில் நமது எண்ணங்களை ஈர்க்கும் ஹைக்கூ கவிதைகளைத் தாங்கி இந்த ஹைக்கூ தொகுப்பு நூல் கவியுலகப் பூஞ்சோலை குழுமத்தால் வெளியிடப்படுகிறது என்பது பெருமைக்குரியது மட்டுமல்ல தமிழ் ஹைக்கூ வரலாற்றில் தடம் பதிக்கின்ற நிகழ்வு என்றே சொல்ல வேண்டும். பங்குபெற்றுள்ள அனைத்து கவிஞர்களின் ஹைக்கூ கவிதைகளை படிக்கும் போது எதை எடுப்பது? எதை விடுப்பது? என்ற கேள்விக்குறியே எழுகிறது. அத்தனையும் சிறப்பு. தமிழ்நெஞ்சம் அமின் அவர்களின் அழகிய வடிவமைப்பில் 244 கவிஞர்களின் ஹைக்கூ கவிதைகள் கொண்ட இத்தொகுப்பு நூலினை அனைவரும் வாங்கிப் படித்தல் வேண்டும். மேலும் முனைவர் பட்டம் பெற விரும்புவோர் இத்தகைய நூலினை ஆய்வு செய்தல் கூடுதல் சிறப்பு என்று கூறி உங்களிடம் இருந்து விடைபெறுகிறேன் வணக்கம்.

அன்பன்

கா. ந. கல்யாணசுந்தரம், M.A., CAIIB
மின்னஞ்சல்: kalyan.ubi@gmail.com
15.05.2019

# அணிந்துரை



**கவியுலகப் பூஞ்சோலையின் ஓராயிரம் செவ்வந்திகள்**

உலகின் அனைத்து மொழியிலும் கவிஞர்கள் எழுத நினைக்கும்ஒருவடிவம்உண்டென்றால்அதுஹைக்கூவாகத்தான் இருக்கும். காரணம், எல்லாருமே இயற்கையை நேசிக்கும் குணம் பெற்றவர்களாகப் பிறப்பெடுத்துள்ளோம் என்பதே. உலக அளவில் இன்று சுற்றுச்சூழலுக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ள நிலையில் அதனை மீட்டெடுக்கும் ஒரு வடிவமாகவும் இயற்கைக் குறித்த விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தக்கூடிய ஒரு வடிவமாகவும் காலம்காலமாகச் சிறப்புப் பெற்றிருப்பது ஹைக்கூ வடிவமேயாகும். பருவ காலங்களையும், அந்தந்தப் பருவகால மனித வாழ்வியல் நிகழ்வுகளையும் படம்பிடித்துக் காட்டும் இந்த ஹைக்கூ வடிவம் வருடத்தின் எல்லா நாட்களிலும் பாடலாம் என்பது ஹைக்கூக் கவிதைக்கான தனிச்சிறப்பாகும்.

தொடக்கக்கால ஹைக்கூக் கவிஞர்களைத் தொடர்ந்து பெரும் பங்காற்றி ஆய்வு செய்து, ஹைக்கூவின் பண்புகளைச் சுட்டிக்காட்டிய பின்னரும், அந்த நூல்களைப் படிக்காதவர்கள், படிக்க வாய்ப்பு இல்லாதவர்களால் படைக்கப்பட்ட மூன்று வரி குறுங்கவிதைகள் எல்லாம் ஹைக்கூக் கவிதைகளாக அடையாளம் காணப்பட்டு இதழ்களிலும் முகநூலிலும் மலிந்தபோது, இதுதான் ஹைக்கூ என்று காவனூர் சீனிவாசன், முனைவர் ம.ரமேஷ், டே.துளசி ராஜா, வதிலைபிரபா, அனுராஜ், இளையபாரதி கந்தகப்பூக்கள், இலங்கையிலிருந்து ராஜன் ராஜ், ரசி குணா மற்றும் சத்தார் எம்.அஸாத் போன்றோர் முகநூல் குழுமங்களில் வழிகாட்டி, வழிநடத்தி ஹைக்கூவை மிகச் சிறந்த இடத்திற்குக் கொண்டு வந்து சேர்த்துள்ளார்கள். அச்சு ஊடகமாகப் புத்தகங்களாக வந்த ஹைக்கூக் கவிதைகளை விடவும் இன்று இணையம், முகநூல் போன்ற காட்சி ஊடகங்களினால் மிகவும் திறம்பட ஹைக்கூக் கவிதைகள் எழுதப்பட்டு வருகின்றன.

ஹைக்கூவிற்கு ஆசான் தேவை இல்லை என்றபோதும் ஹைக்கூவின் பண்புகளை முறைப்படி புதியவர்களுக்கு அறிமுகப்படுத்தவும், ஹைக்கூவின் பாடுபொருளின் களன்களைச் சுட்டிக்காட்டவும் சில சமயங்களில் எழுதிய ஹைக்கூவில் சிறு

குறைகள் இருந்தால் சுட்டிக்காட்டி அதை அவரும் ஏற்றுக்கொள்ளும் சூழ்நிலைக்கு வந்த பிறகு பலரும் பல நல்ல ஹைக்கூக் கவிதைகளை எழுதி வருகிறார்கள் என்பதற்கான எடுத்துக்காட்டுத் தொகுப்புதான் இந்தக் கவியுலகப் பூங்சோலையின் செவ்வந்திமேலே ஒரு பனித்துளி என்னும் இத்தொகுப்பு.

சென்ரியு என்ற ஒரு வடிவம் இருக்கிறது என்ற புரிதல் வந்த பின்னர்தான் மிகச்சரியான ஹைக்கூக் கவிதைகள் தமிழ் இலக்கியத்திற்குக் கிடைத்து வருகிறது என்பதற்குச் சான்றுதான் இந்தக் கவிதைத் தொகுப்பு. இத்தொகுப்பில் உள்ள அனைத்தும் ஹைக்கூக் கவிதைகளாக இருப்பதுதான் இந்தத் தொகுப்பின் சிறப்பு. தொகுப்பாசிரியரின் பணியை எவ்வளவு பாராட்டினாலும் தகும். ஒரே ஒரு ஹைக்கூ எழுதினாலும் அவர் ஹைக்கூக் கவிஞராக ஏற்றுக் கொள்ளும் ஜப்பானியரின் மனநிலை நமக்கும் ஏற்பட்டிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. அவ்வகையில் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளவர்கள் அனைவரும் ஹைக்கூக் கவிஞர்கள் என்று உறுதியாக ஏற்கலாம்.

இத்தொகுப்பில் அனைத்து ஹைக்கூக் கவிதைகளும் ஒவ்வொரு காட்சியை விரித்துரைக்க, என் பங்கிற்கு விரித்துரைக்கவென மூன்று ஹைக்கூக்களை எடுத்துக்கொள்கிறேன். இன்று இயற்கைக்காகப் பலரும் போராடி வருகிறார்கள். எதைப் பற்றியும் சிந்திக்காமல் நிலங்களையும் காடு, மலைகளையும் அழித்து வருகிறோம். அதன் விளைவாகத்தான்,

இறுதி ஊர்வலம்
மயானம் தொடுகிறது
பூக்கள் உண்ணும் ஆடு

என்னும் ஹைக்கூ தக்ஷன் என்பவரின் ஹைக்கூப் பிறந்துள்ளது. இன்று இயற்கை மரணங்களுக்கு இணையாக அகால மரணங்களும் அதிகம் நிகழ்கின்றன. இந்நிகழ்வில் பூமாலைகளை சவ வலம் செல்லும் பாதையெங்கும் இரைத்துச் செல்ல, நிலத்திலும் காடுகளிலும் பசியாற வேண்டிய ஆடுகளும் மாடுகளும் பூக்களைத் தின்னும் இழிநிலைக்குக் கொண்டு வந்து சேர்த்துள்ளோம். ஆடுகளும் கால்நடைகளும் வளர்ந்தால்தான் உலகப் பொருளாதாரம் வளரும். வெறும் தொழிற்புரட்சியால் மட்டும் உலகம் வாழ்ந்துவிட முடியாது என்பதற்கு ஏற்பவே இன்று எல்லாத் தொழில் நிறுவனங்களிலும் ஆட்குறைப்பு செய்து வருகிறார்கள் என்பதை உணர வேண்டும்.

ஒருவருக்கு எத்தனையோ நினைவுகள் மனதில் நிலைத்து நிற்கலாம். அஃது இன்பமாகவோ துன்பமானதாகவோ இருக்கலாம். துன்பமான படைப்புகள் தான் உலக அளவில் அதிக ஆர்வத்தை உண்டாக்குபவையாகவும் நிலைத்து நிற்கச் செய்வதுமாகவும் இருக்கின்ற என்பதற்குச் சான்றாகத் தே.சௌந்தரராஜன் அவர்களின் ஹைக்கூவைச் சுட்டலாம்:

மறைந்த அம்மாவை
நினைவூட்டுகிறது
மார்கழிக் குளிர்

பொதுவாகக் குளிர்காலத்தில் வயதானவர்கள் மரணிப்பது இயற்கையாகும். அவ்வாறான ஒரு குளிர் காலத்தில் மரணித்த அம்மாவை நினைவூட்டுவதாக அமைந்துள்ளது இந்த ஹைக்கூ என மேலோட்டமாக எடுத்துக்கொள்ளாமல், அந்தக் குளிர் காலத்தில் இறந்த அம்மாவை இறக்கவிட்ட மகனுக்கோ மகளுக்கோ அதே மார்கழிக் குளிர் பாடம் கற்பித்திருக்கிறது என்றுதான் எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த மார்கழிக் குளிர் இறந்த அம்மாவின் நினைவை மட்டும் ஊட்டிச் செல்லாது, மகனுக்கோ மகளுக்கோ தற்போது தன்னுடைய மரணப் பயத்தையும் உணர்த்துவதாகவே நாம் எடுத்துக்கொண்டால், இன்று பெற்றவர்களைப் பனியிலும் வெய்யிலிலும் ஏன் முதியோர் இல்லத்திலும் தவிக்க விடக்கூடாது என்ற விழிப்புணர்ச்சியை இந்த ஹைக்கூ சமுதாயத்திற்கு ஏற்படுத்தியிருப்பது தனிச்சிறப்பாகும்.

நமக்கு இசையின்மீது மீளாதக் காதல் இருக்கிறது. எந்த ஓர் இசை கருவிக்கும் நம் மனதை லேசாக்கும் வல்லமை உண்டு. அந்த வகையில் ஓர் எளிய வாத்தியம் புல்லாங்குழல். இதுதான் ஆதி இசையாகவும் இருக்கக்கூடும். கௌரி குலேந்திரன் அவர்களின் ஹைக்கூவும் புல்லாங்குழலை இசைத்துப் பேசுகிறது.

புல்லாங் குழலிசை
இடைவிடாது கேட்கிறது
பிள்ளையின் அழுகுரல்

இயற்கையின் இசையினூடே மனித மனங்களின் சமூக அவலத்தையும் இந்த ஹைக்கூச் சுட்டுகிறது. புல்லாங்குழலிசை இடைவிடாது கேட்க ஒருவர் காட்டில் இருக்க வேண்டும். அதற்குத் தொடர்ந்துகாற்றும்வீசிக்கொண்டிருக்கவேண்டும்.இங்குஇசைப்பது புல்லாங்குழல்தான். ஆனால் இடைவிடாது கேட்பது பிள்ளையின் அழுகுரல். அப்படியென்றால் குழந்தையின் பசியை அடக்கப் புல்லாங்குழல் இசைத்து யாசகம் பெற்று பசியைப் போக்கலாம் என்றுதான் தொடர்ந்து புல்லாங்குழல் இசைக்கப்படுகிறது. இன்று மனித மனங்கள் இவ்வாறானவர்களுக்குக் காசுகளையோ பணத்தையோ பெரும்பாலும் யாசகம் செய்யாமல் யார் எப்படிப் போனால்என்னஎன்றமனநிலைக்குவந்துவிட்டசமூகஅவலத்தையே தோலுரித்துக்காட்டுகிறது. ஆனாலும், குழந்தைகளைக் காட்டி யாசகம் செய்யும் சமூகக் கொடுமையை அரசுகள் போக்க நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டும் என்று இந்தத் தொகுப்பை முன்வைத்தே நாம் வாதிடலாம். இத்தொகுப்பில் எல்லாருடைய ஹைக்கூக் கவிதைகளும் இவ்வாறான இயற்கையையும், இயற்கையூடான மனித வாழ்வியலையும் சமூக அவலங்களையும் மிகச் சிறப்பாகப் படம்பிடிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு, ஒவ்வொருவருடைய ஹைக்கூவும் ஒவ்வொரு காட்சியைத் தந்து சுற்றுச் சூழலைக் காக்கவும், இயற்கையை நேசிக்கவும் மனிதன் மனிதனாக வாழ வேண்டும் என்ற சிந்தனையையும் ஏற்படுத்தியுள்ளது என்பதை இந்தத் தொகுப்பை வாசிக்கும்போது அனைவராலும் உணர முடியும். தொடக்கநிலை ஹைக்கூக் கவிஞர்களுக்கு இந்தத் தொகுப்பு ஒரு பாடப் புத்தகமாகவும் வருங்காலத்தில் அமையக்கூடும் என்பது என் துணிபு.

இப்போதெல்லாம் அச்சு ஊடகமான புத்தகங்கள் குறைந்துபோய் முகநூல், வாட்ஸ்அப் போன்ற குழுமங்களின் மூலமாகக் கவிதைகள் தினந்தோறும் பெருகி வருகிறது. முகநூல் குழுமங்கள்கவிதையைவளர்ச்சிப்பாதையிலும்ஆரோக்கியமான சூழலிலும் கவிஞர்களை இட்டுச் சென்று ஆகச் சிறந்த ஹைக்கூக் கவிஞர்களைத் தங்கள் குழுமத்தில் எழுத வைத்து, அதனைத் தொகுப்பாகவும் கொண்டு வந்து, தொடர் இலக்கியப் பணி செய்து வரும் கவியுலகப் பூங்சோலையின் குழுமத்திற்கும், இக்கவிதைத் தொகுப்பிற்காகப் பணியாற்றியவர்களுக்கும், இந்நூலை சிறப்பாக வடிவமைப்பு செய்துப் பதிப்பித்த தமிழ்நெஞ்சம் அமின் அவர்களுக்கும், கவியுலகப் பூஞ்சோலை நிறுவனர் ஒரத்தநாடு நெப்போலியன் அவர்களுக்கும் அனைத்திற்கும் மேலாகக் கவியுலகப் பூஞ்சோலையில் கவிதைப் படைத்த ஒவ்வொரு செவ்வந்திகளுக்கும் என் தனிப்பட்ட வாழ்த்துகள்.

முனைவர் ம. ரமேஷ்

01.09.2019



# பதிப்புரை

சமீபகாலத்தில் கவிதைகள் பல்வேறு கோணங்களில் அல்லது தளங்களில் எழுதிவந்தாலும் ஹைக்கூ என்று சொல்லப்படுகின்றதுளிப்பாகவிதைகள்பெரும்வரவேற்பைபெற்று வருகின்றது. காரணம் இரண்டு, மூன்று சொற்களைக்கொண்டு மூன்று வரியில் அக்கருத்தின் ஆழத்தை சொல்லுகின்றபோது அக்கவிதை மீதான தாக்கம் இயல்பான வாழ்வியல் சூழ்லில் நிலைபெற்று நின்றுவிடுகிறது.

ஓலைக் குடிசை
கொழுந்துவிட்டு எரிகிறது
சமைக்கும் அடுப்பு..

- தட்சணா

வறுமையை எளிதாக படம்பிடித்துக் காட்டுகிறது இக்கவிதை. ஏழையின் வீட்டில் அடுப்பு எரிவது, சமைப்பது என்பது அவ்வளவு எளிதானதல்ல. ஆனால் அதே நேரம் ஒரு குடிசை தீப்பற்றி எரிகின்றபோது எவ்வளவு விரைவாக எரியும் என்பது நமக்குத் தெரியும். குடிசை எரிவதையும் சமையல் அறையில் அடுப்பு எரிவதையும் ஒற்றுமைபடுத்தி (ஏழைகளின் வயிறு எரிவதை) ஹைக்கூவில் காட்டுகிறார். இங்குதான் ஹைக்கூ வெற்றி பெறுகின்றது. நம் மனதில் ஒரு சலசலப்பை ஏற்படுத்துகின்றது. மனதில் ஒரு காட்சியை கண்முன்னே ஏற்படுத்துகின்றது. கடைசியில் நம் மனதிலே தங்கிவிடுகின்றது. இதுதான் ஒரு கவிதை சொல்லவேண்டிய வேலை. அப்படியான கவிதைகள்தான் காலம் கடந்தும் நிற்கும்.

புல்லாங் குழலிசை
இடைவிடாது கேட்கிறது
பிள்ளையின் அழுகுரல்..

- கௌரி குலேந்திரன்

புல்லாங்குழலிசைபோல் கேட்கிறது ஓர் தாய்க்கு தன் குழந்தையின் அழுகுரல்.

ஒற்றைப்பனித்துளிக்குள்இத்தனைக்கவிதைகளா?புல்லின்

மீது படர்ந்திருக்கும் பனித்துளி ஆயிரம் ஹைக்கூ கவிதைகளத் தந்துவிடுகின்றன. இயற்கையின் அழகியலை ரசிப்பதற்கும், உணர்வதற்கும், உள்வாங்கி மனது குளிர்வதற்கும் இன்னும் பலகோடி கவிஞர்களும், ஹைக்கூவினை தமிழ்நல்லுலகுக்கு வழங்க வேண்டும். ஹைக்கூ வளர வேண்டும் என வாழ்த்தி நூலில் பங்குகொண்ட அனைத்து கவிஞர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

"கவியுலகப் பூஞ்சோலை" கவிஞர்களுக்கு பலவகைகளில் வாய்ப்பளித்து தனது சீரியப்பணியை செவ்வனே செய்து வருகிறது. முகநூல் தளத்தில் மட்டுமல்லாது தனது சிறப்புப்பணியாக தொகுப்பு நூல்களையும் வெளியிட்டு தன்னை தமிழுலகில் தன்னிலைபடுத்தி தடம்பதித்து கொள்கிறது. நிச்சயம் வரும்காலங்களில் பேசப்படும் குழுமமாகத் திகழுமென்பது எனது நம்பிக்கை.

வாழ்த்துகள் !

அன்புடன்,

## தமிழ்நெஞ்சம் அமின்

ஆசிரியர் "தமிழ்நெஞ்சம்" திங்களிதழ்
பிரான்சு

03.03.2019



# மகிழ்ந்துரை..

பாவலர் ஒரத்தநாடு நெப்போலியன் அவர்களின் கவியுலகப் பூஞ்சோலை கவிக் குழுமத்தால் தமிழ்நெஞ்சம் பதிப்பகம் அழகிய வடிவமைப்புடன் வெளியீடு செய்யும் "செவ்வந்தி மேலே ஒரு பனித்துளி" எனும் ஹைக்கூ நூல் பல கவிஞர்களின் ஹைக்கூகளை உள்ளடக்கியது அற்புதமான ஆச்சரியம்.

ஹைக்கூ தமிழில் கால்பதித்து நூற்றாண்டைத் தொட்டு நிற்கும் இவ் வேளையில் அதிக ஹைக்கூ கவிஞர்களின் படைப்புக்களைக் கொண்ட முதல் நூல் இதுவென்பதே அருமையும் பெருமையுமாகும்.

இந்நூல் தொகுப்பில் என்னோடு இணைந்து பணி யாற்றிய சக தொகுப்பாளர்களான

கவிச்சுடர் கல்யாணசுந்தரம் ஐயா,
மயூ அருண்.
ஜிவிதன்.
தனா சர்மா.
மற்றும்
தமிழ்நெஞ்சம் அமின் ஐயா

அனைவருக்கும் எனதினிய நன்றிகளும் வாழ்த்துகளும்.

ஒவ்வொரு கவிஞனின் படைப்பும் அவரவர் செய்யும் தவம் போன்றதாகும் தவத்தின் பலன்களை படித்தேன் அறிந்து கொண்டேன். பல ஹைக்கூகளில் கவிஞர்கள் அவ்வளவு அழகான முறையில் இயற்கையை பாடியிருக்கின்றார்கள்.

குளத்தில் எருமைகள் இறங்கியதும்
ஒருமுறை மூழ்கி நிமிர்கின்றன
தாமரைப் பூக்கள்..!

திி.கி. கமலானந்தன் விளாந்தோட்டம்

கவிஞனின் பார்வை எவ்வளவு அழகு பாருங்கள் குளத்தில் இறங்கிய எருமைகள் ஒருமுறை மூழ்கி நிமிர்கின்றன ஏன் குளத்தில் எருமைகள் இறங்கினால் ஒருமுறை தானா மூழ்கும் என்ற கேள்வியை வரவழைக்கிறது முதலிரு வரிகள் இறுதியில் அங்கே ஒருமுறை மூழ்கி நிமிர்கின்றன தாமரை இலைகள் என்று கவிஞர் அழகாக ஒரு உண்மை சொல்லி முடித்திருக்கிறார்..

ஆனால் அங்கு மூழ்கியது எழுந்தது இலைகள் மட்டுமே பூக்கள் இல்லையென்பது சொல்லாமல் சொல்லப்பட்டு இருக்கிறது. மிகவும் அருமையான ஹைக்கூ காலத்தை வென்று விடும் இதுபோன்ற ஹைக்கூகள்

தொடர்ந்து..

சில ஹைக்கூகள் வாசகனை எளிதில் சென்றடைகிறது அது பளிச்சென்று மனதில் படம் பிடித்துக் காட்டுகிறது அதுபோன்ற ஹைக்கூ ஒன்றை கீழே பாருங்கள்

மலைவாழ் குருவி
தனிமையில் பாடுகிறது
துணையாக எதிரொலி..!

மித்ரா கவிமுத்து

அழகிய காட்சி இது அனைவருக்கும் இலகுவாகப் புரியும்படி இருக்கிறது ஹைக்கூ இயற்கையோடு பின்னிப் பிணைந்ததென்பதற்கு இதுபோன்ற ஹைக்கூகளே ஆதாரம். இப்படி பல்வேறு ஹைக்கூகளை தாங்கி நிற்கிறது செவ்வந்தி மேலே ஒரு பனித்துளி ஹைக்கூ நூல்.

நன்றி

ரசி குணா

தலைவர் : கவியுலகப் பூஞ்சோலை
08.05.2019

# செவ்வந்திமேலே ஒரு பனித்துளி

# ஹைக்கூ எண்ணும்

1. ரசி குணா
2. அருண் மயூ
3. தனா சர்மா
4. கா.ந. கல்யாணசுந்தரம்
5. தென்றல் கவி
6. கூரா அம்மாசையப்பன்
7. நா. பாண்டியராஜா.
8. தமிழ்நெஞ்சம் அமின்
9. முஹம்மட் ஜாபிர்
10. புவனா சற்குணம்
11. தட்சணா
12. சீனு செந்தில்
13. அ. அண்ணாமலை
14. தர்ஷினி அஜந்தன்
15. முகம்மது அலவி
16. கவிநிலா
17. மாறன் மணி
18. ஏ. ஆர். முருகன் மயிலம்பாடி
19. உஷாராணி மணி
20. கீர்த்தி கிரிஷ்
21. நிலாக்கவி நதீரா
22. எழில் (எழிலேந்தி)
23. கவிமணி கவிநுட்பம்
24. சுந்தரம் மூர்த்தி
25. உளூர் உத்தமன்
26. சக்தி அருளானந்தம்.
27. கவிஞர் முகிலை பாஸ்ரீ
28. எம். ரி. எம்.அன்ஸார்
29. தேத்தாகுடி பூங்குன்றன்
30. சி.பாக்கியராஜ்
31. ராதை குபேரன்
32. சத்தார் எம். அஸாத்
33. கரு. கிருஷ்ணமூர்த்தி
34. தி. பிரியங்கா
35. க.சுபேதன்
36. மருதா சமத்
37. ஆ.நடராஜன்
38. க. செல்வகுமார்
39. நளினா கணேசன்
40. ஆத்தூர் சாகுல்
41. செ. செல்வமணி செந்தில்
42. மெ. கிஷோர் கான்
43. ச. ப. சண்முகம்
44. அப்துல் ரஷாக் ஏ காதர்
45. அன்பு கரன்
46. கவின் ஆனந்த்
47. அ. பாண்டுரங்கன்
48. காரைக்குடி கிருஷ்ணா
49. ஜவ்வாது
50. ஷேக் அப்துல்லாஹ்
51. கார்த்தி கோவிந்தன்
52. பாலக்காட்டு சுந்தரம்
53. நஸ்மின். நாஸர்
54. நஸீரா எஸ் ஆப்தீன்
55. அன்புடன் ராஜா
56. இந்ரன் மங்கேஷ்
57. தா. தமிழ் தங்கராஜ்
58. ரீனா ஜெயா
59. கவியன்பன் கலாம்
60. இரா. நல்லமுத்து
61. அனுகவி றிப்கான்
62. உறையூர் வா. மகேஷ்
63. கோபால்
64. சாந்தகுமாரி
65. அன்புச்செல்வி சுப்புராஜூ
66. அன்பழகன்ஜி
67. பி. ச. கோபால்குமார்
68. ஷல்மா ஷாஜஹான்
69. பி மதிவாணன்
70. சு. வி. லட்சுமி
71. கு. பாலா.பெங்களூர்
72. பாவலர் வீரவாணன்
73. த. பேபி ஷகிலா
74. சு. சுப்புராஜூ
75. லோ. ராஜ்குமார்
76. ம. தயாநிதி
77. ஈழவன் தாசன்
78. கவிஞர் மா. ஷங்கர்
79. சாலிஹ் எம். றியாழ்
80. நஸீரா வசூக்
81. பொலிகையூர் சரண்
82. வெற்றிப்பேரொளி
83. முபீன் றிஸான்
84. யுகபுத்திரன்
85. ராஜிலா ரிஜ்வான்
86. அமிர்தினி பத்மநாதன்
87. புவனேஸ்வரி சண்
88. அனுராதா கட்டபொம்மன்
89. கோகிலா ஜெயக்குமார்
90. அனுபிர் எச் எம்
91. கி. இலட்சுமி
92. எ. எம். மிஸ்ருல்ஸறீனா
93. ச.கனகசுப்புராஜ்
94. ஆலடிமருது
95. தே. சௌந்தரராஜன்
96. திவ்யா ஈழமகள்
97. மயிலையூர் மோகன்
98. ஷர்ஜிலா யாகூப்
99. க. செல்வராணி
100. பரமானந்தம் தியாகராஜா
101. கவிஞர் அனுராஜ்
102. த. அதியமான்
103. அ. தனபால்
104. கண்ணதாச முருகன்
105. ஸ். டென்னிஸ்
106. பாணால். சாயிராம்
107. பாலன் நந்தகுமார்
108. காரையன் (கதன்)
109. கவிஞர் ஆபா
110. நிர்மலா சிவராசசிங்கம்
111. இ. லெ. முதிலுத்தீன்
112. உறையூர் வா. மகேஷ்.
113. பட்டுக்கோட்டை பெ மூர்த்தி
114. எஸ். எஸ். எம். றபீக்
115. லக்ஷ்மி கார்த்திகேயன்
116. தட்சணாமூர்த்தி
117. முனைவர் வே. புகழேந்தி
118. J.K.பாலாஜி
119. மீனா கோபி
120. சதா.முருகன்
121. மு. தமிழ்விந்தன்
122. கவித்துளி சக்தீஸ்வரன்

# கவிஞர்கள் பெயரும்

123. இளவல் ஹரிஹரன்
124. வபீரா வபி
125. ச. கோபிநாத்
126. அ.மாப்பிள்ளைராவுத்தர்
127. ர. ரகுராமன்
128. அ. இலியாஸ் அகமத்
129. தமிழன் தயா
130. சதீஷ்குமார்
131. ம.கமல கண்ணன்
132. ஞால இரவிச்சந்திரன்
133. முல்லை நிரோஜன்
134. கவிஞர் ஜீவா
135. வளருங்கவி அமுதன்
136. கா. சதாசிவம்
137. றிஸ்வான்
138. அன்ரனி சாள்ஸ்
139. பூமகன்
140. அபிபம்மா அப்பாஸ்
141. தங்கை பாலா ஆசினி
142. புதுவை க. சரவணன்
143. கலாநேசன் சரவணன்
144. புவனேஸ்வரி சண்
145. செண்பக ஜெகதீசன்
146. செந்தூரன் மீரா
147. ராஜேஷ்
148. பசுங்கிளி மணியன்
149. மன்னைமணிமாறன்
150. கே. நிதாஸ்
151. ரா. கணேஷ்
152. சங்கீதா பிரபு (பிச்சிப் பூ)
153. ஆர். பூமாதேவி
154. சுதாபிரபாகரன்
155. ராஜூ ஆரோக்கியசாமி
156. மணி தியாகேஸ்
157. ஸ்ரீ. ஸ்ரீலக்சன்
158. சிவதர்சினி ராகவன்
159. புன்னகைவேந்தி
160. அருள் பி ஜி
161. கலாராணி
162. சிவனேஷ் பூசைத்துரை
163. ரமேஷ் கலை மித்ரன்
164. சுதேன் சுதேகி
165. மகேஸ்வரி கிருஷ்ணசாமி
166. பா வண்ணமுத்து
167. ச. ப. சண்முகம்
168. மித்ரா கவிமுத்து
169. சிவகங்கை கா. கருப்பசாமி
170. மும்பை கா. சங்கரன்
171. சரஸ்வதி ராசேந்திரன்
172. கௌரி குலேந்திரன்
173. எம். ஐ. எம். அஷ்ரப்
174. மு. ஷாக்கீர்
175. எஸ். நாகலிங்கம்
176. விஜி விஜிதா
177. கா. ராம்ஜீ உலகநாதன்
178. க. அர. இராசேந்திரன்
179. பைசர் சுல்தான்
180. இ. சதீஸ்குமார்
181. மு. விஜயசாரதி
182. வதிலைபிரபா
183. ஆஸாத் கமால்
184. வாசன் சாவி
185. ஜிவிதன்
186. கண்ணுசாமி பூமாலை
187. கு. ஜெயக்குமாரி/ஜெய்
188. சீ.குறிஞ்சிச்செல்வன்
189. பாத்திமா சில்மியா
190. தி. வெண்ணிலா
191. மீராஸ்ரீ
192. கவிதா அசோகன்
193. மகிழ்நன் மறைக்காடு
194. முனைவர் ம. ரமேஷ்
195. இளயபாரதி கந்தகப்பூக்கள்
196. ஹைக்கூ தக்ஷன்
197. யோ. கிருஷ்ணவேணி
198. அன்புலதா
199. சுமிமுருகன்
200. ஓவியக்கவிஞர் உமாபதி
201. பிரேம்குமார் பிரஜனா
202. சி.கேதீஸ்வரன்
203. ஐ.பிரபு
204. சிவகாமசுந்தரி நாகமணி
205. மணிமொழி லிங்கம்
206. பாண்டியராஜ்
207. பாண்டிய ராஜ் (மீன் கொடி)
208. ஜெயச்சந்திரன். ப
209. முஹம்மது கியாஸ்
210. ஹரிகுமார் வேலாயுதன்
211. அருணாச்சலசிவா
212. இரா. கி. இராமகிருஷ்ணன்
213. சுபஸ்ரீ
214. பொம்மிடி மோகன்தாஸ்
215. தி.கி. கமலானந்தன்
216. கவிஞர் உதய்
217. வேலணையூர் ரஜிந்தன்
218. காவத்தையூர் பழனியாண்டி
219. ஐ. துஷ்யந்தன்
220. ஏ.ஆர்.றைசா பர்வீன்
221. கிரிஜா.தி
222. கோவை புதியவன்
223. வெ.சென்னப்பன்
224. நா.பிரகாஷ்
225. ஜாக்குலின் என்டன்
226. ராஜகவி ராகில்
227. சாரதா தேவி
228. ராஜ்பாரதி
229. ரா.ஆகாஷ்கண்ணன்
230. சாரதா க. சந்தோஷ்
231. செல்லம்பாலா
232. கலாலோகநாதன்
233. ஈழபாரதி
234. வெற்றிப்பேரொளி
235. பிரியநிலா
236. அசோக் குமரன்
237. காரை இரா. மேகலா
238. இதயம் விஜய்
239. ஜென்ஸி
240. சோமு.சக்தி
241. மொஹமெட் சிக்கந்தர்
242. அருண்சிவா
243. சரவிபி ரோசிசந்திரா
244. ஒரத்தநாடு நெப்போலியன்



1

மெல்லிய காற்றினில்
திசை திரும்பும் குடைக்குமேல்
முதல் துளியின் சத்தம்..

**கவிஞர் ரசி குணா**
மட்டு நகர், இலங்கை

2



வீழ்த்திய பூக்களை
புரட்டிப் போடுகின்றது
அடுத்த காற்று..

**அருண் மயூ**
மட்டு நகர், இலங்கை

3



புயற்காற்றிலசையும் மரங்கள்
வேறிடம் நோக்கிச் செல்கின்றன
கூடிழந்த பறவைகள்...

**தனா சர்மா**
ஈழம்



4

பனி உதிர்க்கும் மலர்கள்
காற்றில் அசைய மறுக்கின்றன
பிரிவின் துயர்..


கவிச்சுடர்
**கா.ந. கல்யாணசுந்தரம்**

5

மஞ்சள் செவ்வந்தி
அழகாய்ச் சிரித்தது
கிராமத்துப் பெண்..

**தென்றல் கவி**





6

அடர்வான காட்டில்
அதிகம் கூச்சலிடுகிறது
அமைதியற்ற மனம்..

**கூரா அம்மாசையப்பன் ராமசாமி**
சேலம் உருக்காலை



7

அதிகாலைப் பொழுது
அழகாய் இருக்கிறது
மார்கழிக் கோலம்..

**நா.பாண்டியராஜா**

8

பூவின் மேலிலிருந்து விழும்
பனித் துளிகளையும்
தாங்கிக் கொள்ளும் பூமி..

**தமிழ்நெஞ்சம் அமின்**
பிரான்சு



9



மலர்ந்த செவ்வந்திப்பூ
உதிர்ந்தும் ஒட்டிக் கொள்கிறது
கொட்டிய பனித்துளி..

**முஹம்மட் ஜாபிர்**
மருதமுனை 06



10

புயல் காற்றிலே
பறந்து வந்து விழும்
நெகிழிப் பைகள்..

**புவனா சற்குணம்**



11

ஓலைக் குடிசை
கொழுந்து விட்டு எரிகிறது
சமைக்கும் அடுப்பு..

**தட்சணா**

12



காற்றிலாடும் மலர்கள்
உதிராமல் இருக்கின்றன
பனித் துளிகள்..

**சீனு செந்தில்**
ஊரப்பாக்கம்.



13

ஏணியாய் மூங்கில்கள்
எட்டும் தொலைவில் இருக்கிறது
பாறையில் தேன்கூடுகள்..

**அ. அண்ணாமலை**


14



வறண்ட நிலத்திலும்
வளர்ந்து கொண்டிருக்கின்றது
உழவனின் நம்பிக்கை..

**தர்ஷினி அஜந்தன்**
இலங்கை.

15



அடிக்கடி நீர் தெளித்தும்
வாடிப் போயிருக்கும்
பூக்காரி முகம்..

**முகம்மது அலவி**
இலங்கை.



16

மல்லிகை மொட்டு
கட்டக் கட்ட அவிழ்கிறது
பூவின் நறுமணம்..

**கவிநிலா.**



17

தெருவிளக்கில்
மங்களாகத் தெரிகிறது
மூடுபனி..

**மாறன் மணி**

18

தலையில் கரகம்
ஆடிமுடிய அவிழ்க்கப் படுகிறது
திரைச்சேலை..

**ஏ.ஆர்.முருகன்**
மயிலம்பாடி.



19

உதிக்கும் சூரியன்
மறைந்து கொண்டே வருகிறது
இலையில் பனித்துளி..

**உஷாராணி மணி**





20

வானவில்லின் நிறம்
கலைந்து கிடக்கின்றது
வாசற் கோலம்..

**கீர்த்தி கிரிஷ்**

21

அதிகாலைப் பனிமூட்டம்
நிரம்பி வழிகிறது
கூடையில் கொழுந்து..

**நிலாக்கவி நதீரா**
புத்தளம்





22

பறவையின் இருப்பிடம்
காற்றில் பறக்கிறது
உதிரும் இலை.

**எழில் (எழிலேந்தி)**
கடலூர்.



23

மூங்கில் காடு
இசை கேட்டு தலையாட்டுகிறது
ஊர்ந்து செல்லும் நத்தை..

**கவிமணி கவிநுட்பம்**
ஓட்டமாவடி, இலங்கை

24

குடையை மடக்கியதும்
நேராய் தெரிகிறது
மறைந்திருந்த வானவில்..

**சுந்தரம் மூர்த்தி**



25

கூடையையே பார்க்கிறது
மீன்காரி வரும்வரை
காவலிருக்கும் வளர்ப்பு நாய்..

**உளூர் உத்தமன்**





26

மூங்கிலிலமர்ந்த வண்டு
சத்தமாக ஒலியெழுப்புகிறது
காட்டு யானை..

**சக்தி அருளானந்தம்**



27

குளத்தில்  நிலா
சலனமற்று நிற்கும்
கரையோர மரங்கள்..

**கவிஞர் முகிலை பாஸ்ரீ**

28

மலரின் இதழ்கள்
நிறைந்து காணப்படுகின்றன
பனித்துளிகள்..

**ஏரூர்கவி எம்.ரி.எம்.அன்ஸார்**





29

அடர்ந்த வனத்தால்
நன்மை தருகிறது
பருவமழை..

**தேத்தாகுடி பூங்குன்றன்.**

30

மூடு பனிக் காலம்
அதிகரித்து வருகிறது
கம்பளி விற்பனை..

**சி.பாக்கியராஜ்**
தருமபுரி



31

அதிகாலை சூரியன்
மெல்ல மெல்ல உலர்கிறது
பூவிலுள்ள பனித்துளி..

**ராதை குபேரன்**





32

சீதை இறங்கிய நெருப்பு
களங்கமின்றித் தெளிவாகியது
இராவணனின் கற்பு..

**சத்தார் எம். அஸாத்**



33

புல்வெளியில் நடக்க
பாதம் நனைக்கிறது
அதிகாலைப் பனி..

**கரு. கிருஷ்ணமூர்த்தி**

34



மூடுபனிக் காலம்
பார்வைக்குப் புலப்படவில்லை
சத்தமிடும் நாய்..

**தி. பிரியங்கா**
இலங்கை.

35



பனி விழும் காலை
மெதுவாக மலர்கிறது
குழந்தையின் முகம்..

**க.சுபேதன்.**
மட்டக்களப்பு, இலங்கை.




36

பச்சை இலைக் கூடு
காய்ந்து விழுந்ததும் கலையும்
சித்தெறும்புக் கூட்டம்..

**மருதா சமத்**

37



கல்தூண் வேலி
உயிர்ப்பின்றி இருக்கும்
வெறித்த ஓணான்..

**ஆ.நடராஜன்**



38

சூரிய உதயம்
தெரியாமல் மறைகிறது
பனித்துளிகள்..

**க. செல்வகுமார்**
நெய்விளக்கு.



39

மக்கள்  கூட்டம்
மெல்ல மெல்ல நகர்கிறது
காயப்பட்ட யானை..

**நளினா கணேசன்**
ஈரோடு

40



விறகு அடுப்பு
கண்ணீர் கசிய வைக்கும்
அம்மாவின் நினைவு..

**ஆத்தூர் சாகுல்**

41

யாருமற்ற வனம்
அருகில் வருகிறது
சிறு வண்ணத்துப்பூச்சி..

**செ. செல்வமணி செந்தில்**





42

காலைப் பனி
நடைபயின்று களிக்கின்றன
காக்கைக் குஞ்சுகள்..

**மெ. கிஷோர் கான்**



43

தேங்கிய மழைநீர்
மெல்ல பிரசவிக்கிறது
பிறை நிலவை..

**ச.ப.சண்முகம்**

44

வீசும் தென்றல்
மனம் குளிரச் செய்கிறது
நல்ல செய்தி..

**அப்துல் ரஷாக் ஏ காதர்**





45

அடர்ந்த புல்வெளிகள்
எங்கும் படர்ந்து கிடக்கின்றன
பனித் துளிகள்..

**அன்பு கரன்**

46

உதிர்ந்த மலர்
ரசிப்பதை நிறுத்தமுடியவில்லை
செடியில் வண்ணத்துப்பூச்சி..

**கவின் ஆனந்த்**
வழுவூர், மயிலாடுதுறை



47

குப்பை மேடு
சுகாதாரத்தை இழந்த நிலையில்
குடிசை வீடுகள்..

**அ.பாண்டுரங்கன்**
மதுரை.






48

தொலைதூரப் பனைமரம்
பெரிதாய்த் தெரிகிறது
புல்லின்நுனி பனித்துளியில்..

**காரைக்குடி கிருஷ்ணா**



49

வாசலில் கோலம்
மெல்ல நகர்ந்து செல்கிறது
உணவோடு எறும்பு..

**ஜவ்வாது**

50



கதிரவன் ஒளியில்
காணாமல் போகிறது
மூடுபனி கூட்டம்..

**ஷேக் அப்துல்லாஹ்**
அதிராம்பட்டினம்.

51



அழகான புல்வெளி
மெல்ல உடைந்து போகிறது
பாதம் பட்ட பனித்துளி..

**கார்த்தி கோவிந்தன்**
சென்னை.



52

பனித் துளியோடு செவ்வந்தி
தலை அசைக்கின்றது
வண்ணத்துப் பூச்சி..

**பாலக்காட்டு சுந்தரம்.**

53

இலையுதிர் காலம்
ஒன்று கூடிக் கலையும்
பறவைகள் கூட்டம்..

**நஸ்மின். நாஸர்**
ஏறாவூர்.02, இலங்கை





54

தென்றலின் தாலாட்டு
உருண்டு மறைந்து செல்லும்
செவ்வந்தி மேல் பனித்துளி..

**நஸீரா எஸ் ஆப்தீன்**



55

மழை நின்றபின்பும்
குடை பிடித்துக் கொண்டிருக்கும்
காளான் கூட்டம்..

**அன்புடன் ராஜா**

56

பசுமையான வெளி
பார்ப்பதற்கு அழகாக இருக்கிறது
பௌர்ணமி நிலவு.

**இந்ரன் மங்கேஷ்**
லண்டன்.



57

உடைகள் கலைந்ததும்
விருந்துக்குத் தயாராயின
நெல்மணிகள்..

**தா.தமிழ் தங்கராஜ்**





58

ஆட்டம் முடிந்தபின்
ஒன்று சேர்ந்துவிடுகின்றன
சதுரங்கக் காய்கள்..

**ரீனா ஜெயா**



59


முன்னேறிச் செல்லும்
முன்பாகவே பின்னால் வந்து
முட்டுகிறது மரணம்..

**கவியன்பன் கலாம்**
அதிராம்பட்டினம்

60

பச்சைத் துரோகம்
பயனோடு நிற்கிறது
எதிரியின் வியூகம்..

**இரா. நல்லமுத்து**





61

பழைய காயம்
கண்ணில் வந்து செல்கிறது
கல்லூரிச் சண்டை..

**அனுகவி றிப்கான்**

62

மூழ்கடிக்க முயற்சித்து
பலமுறையும் தோற்கிறது
தாமரையிடம் மழை..

**உறையூர் வா.மகேஷ்**
காகிதபுரம், கரூர்.



63

தாமரையில் பனித்துளி
தள்ளாடுகிறது உறவாடிட
தேனுண்ட வண்டு..

**கோபால்**





64

பனிக்கால பூக்கள்
வேலியெங்கும் பூத்திருக்கு
சிலந்தி வலைகள்.

**சாந்தகுமாரி**
கோலாலம்பூர், மலேசியா.



65

முளைத்த நாற்று
கதிர் முற்றக் காத்திருக்கின்றன
பசித்த வயிறுகள்..

**அன்புச்செல்வி சுப்புராஜூ**

66



மார்கழி பனிப்பொழிவு
கசிந்து போர்வையாகிறது
புல்லாங்குழலிசை..

**அன்பழகன்ஜி**

67



பனிக்காற்று வீசுகிறது
பாதை எங்கும் பூக்கள்
பகல் கனவு..

**பி.ச.கோபால்குமார்**



68

அதிகாலைப் பொழுது
முட்டி மோதி உடைகின்றன
பனித்துளிகள்..

**ஷல்மா ஷாஜஹான்**

69

அதிகாலை மூடுபனி
அணையாமல் நனைகிறது..
தெருவிளக்கு..

**பி மதிவாணன்**






70

விடாத தூறல் மழை
மரத்தடியில் விநாயகர் சிலை
பூவுடன் உதிரும் நீர்த்துளிகள்..

**சு.வி.லட்சுமி**



71

வண்ண வண்ண மலர்கள்
போட்டி போடுகின்றன
வண்ணத்துப்பூச்சிகள்..

**கு. பாலா**
பெங்களூர்.

72

மூங்கில் காடுகள்
சேர்ந்து பாடுகின்றன
துளையிடும் வண்டுகள்.

**பாவலர் வீரவாணன்**



73

பூக்களின் மணம்
மனதை ஈர்க்கிறது
வண்டுகளின் ரீங்காரம்..

**த.பேபி ஷகிலா**
பெருந்துறை





74

கரையும் காகம்
கண்டதும் நினைவுக்கு வருகிறது
மூத்தோர் தினம்..

**சு.சுப்புராஜு**



75

அழகு பூக்கள்
ஆனந்தமாய் இருக்கின்றது
அவளின் புன்னகை..

**லோ. ராஜ்குமார்**

76

சூரிய ஒளி
மெதுவாய் மறைகிறது
புல்நனைத்த பனித்துளி..

**ம. தயாநிதி**





77

குயிலின் இசை
கூடவே இசைக்கின்றது
மூங்கில் காடு..

**ஈழவன் தாசன்**

78

இருள் சூழ்ந்ததும்
அணைக்கத் தொடங்கியது
இலைகளை மூடுபனி!

**கவிஞர் மா.ஷங்கர்**



79

மனித தரகர்களால்
விலை பேசப்படுகிறது
வனம்..

**சாலிஹ் எம்.றியாழ்**





80

பசுமையான புல்வெளி
பனி படிந்து காணப்படுகிறது
குளிர்ச்சியான காலநிலை..

**நஸீரா வசூக்**



81

வரம்பிடை வளரும் பச்சையம்
வற்றாத நீரோடையின்
வசந்தகால நினைவுகள்..

**பொலிகையூர் சரண்**

82

ஒற்றைப் பனித்துளிக்கு
ஏங்குகிறது புல்வெளி
கடுங்கோடைத் தாகம்.

**வெற்றிப்பேரொளி**



83

மூங்கில் காடுகள்
வியாபித்திருக்கிறது
காற்றில் வரும் இசை..

**முபீன் றிஸான்**





84

அழும் குழந்தை
உறங்க வைத்தன
மழைத் துளிகள்

**யுகபுத்திரன்**

85

ஒற்றையடிப் பாதை
பனிவிலகத் தெரிகிறது
அடர்ந்த காடு..

**ராஜிலா ரிஜ்வான்**





86

காலைச் சூரியன்
மெல்ல நகர்கின்றது
இரைதேடும் பறவைகள்..

**அமிர்தினி பத்மநாதன்**



87

இலைகளில்லா மரக்கிளை
பச்சையாகத் தெரிகிறது
அமர்ந்திருக்கும் கிளி..

**புவனேஸ்வரி சண்**

88

வீட்டுத் தோட்டத்தில்
பூத்துக் குலுங்கிச் சிரிக்கின்றன
பிள்ளைச் செல்வங்கள்..

**அனுராதா கட்டபொம்மன்**



89

விளைந்த நெற்கதிர்கள்
வீடுவந்து சேர்கின்றன
மாடப் புறாக்கள்..

**கோகிலா ஜெயக்குமார்**





90

புற்களின் நுனியினில்
அமைதியாய் உறங்குகிறது
பனித்துளிகள்.

**அனுபிர் எச் எம்**



91

தேர்தல் பிரச்சாரம்
சூடு பிடிக்கிறது
பிரியாணி விற்பனை..

**கி.இலட்சுமி,**
சென்னை.

92

குளிரும் மார்கழி
அசையாமல் நின்றன
பூவில் பனித்துளிகள்...

**கவிஞர்:எ.எம்.மிஸ்ருல்ஸறீனா**
கண்டி நகர், இலங்கை





93

கடும் பனிப் பொழிவு
தவிர்க்க முடியவில்லை
சாலை விபத்துகள்

**ச.கனகசுப்புராஜ்.**

94

வீதியெங்கும் வாகனங்கள்
மெதுவாக விலகிச் செல்லும்
மூடுபனி..

**ஆலடிமருது**



95

மறைந்த அம்மாவை
நினைவூட்டுகிறது
மார்கழிக்குளிர்

**தே.சௌந்தரராஜன்**





96

காலைப் பொழுது
விறுவிறுப்பாகப் போகிறது
தொடர் நாடகம்...

**திவ்யா ஈழமகள்**



97

தெளிந்த வானம்
துல்லியமாகத் தெரிகின்றது.
பௌர்ணமி நிலவு

**மயிலையூர் மோகன்**



98

இலையின் நுனி
மினுமினுத்துக் கொண்டிருக்கிறது
மழைத்துளி..

**ஷர்ஜிலா யாகூப்**



99

பசுமையான வயல்
இடையிடையே காணப்படும்
காவல் பொம்மை...

**க. செல்வராணி**



100

பறக்கும் கொக்குகள்
பயத்தினால் ஓடி ஒளிகின்றன
ஓடை மீன்கள்..

**பரமானந்தம் தியாகராஜா**

101

செவ்வந்திப் பூவில் உருளும்
சிறுபனித்துளி பிரதிபலிக்கிறது
அகன்ற வானம்..

**கவிஞர் அனுராஜ்**





102

அடிவானம் சிவக்க
நிறம் மாறியபடி
மரத்தில் பச்சோந்தி..

**த.அதியமான்**



103

கட்டிய ஆடுகளை
அவிழ்க்கச் சென்றேன்
அருகருகே புல்வட்டங்கள்..

**அ.தனபால்**


104

நேரம் போகப் போக
வளர்ந்து கொண்டே இருக்கிறது
மரத்தின் நிழல்...

**கண்ணதாச முருகன்**



105



எந்த பறவையின் எச்சமோ
உறுதியான சுவரில்
வளர்ந்து வரும் ஆலமரம்...

**ஸ்.டென்னிஸ்**



106

பசுமையான மலைகளை
சுற்றிக் காட்டுகிறது
புகையிரதம்..

**பாணால். சாயிராம்.**



107

மகளின் ஓவிய ஆசை
முதல் காகிதமாகும்
தந்தையின் கன்னம்..

**பாலன் நந்தகுமார்**

108



பசுமையான புல்வெளி
பசியாறிக் கொள்கின்றன
பசுவும் கன்றும்..

**காரையன் (கதன்)**



109

பாதுகையில்லாப் பயணம்
பரவசம் அளிக்கிறது
புற்களின் மென்மை...

**கவிஞர் - ஆபா**

110

மௌனமான காட்டில்
இசைக்கத் தொடங்கிவிட்டன
மூங்கில்கள்..

**நிர்மலா சிவராசசிங்கம்**



111

வசந்த காலம்
கூடி மகிழ்ந்து கொள்ளும்
பறவைகள்..

**இ.லெ.முதிலுத்தீன்**





112

சூரியனின் மறைவை
மெல்ல எட்டிப் பார்க்கிறது
பொந்திலிருந்து ஆந்தை.

**உறையூர் வா.மகேஷ்**



113

நீச்சல் கற்றுக் கொடுத்த
நதியைக் கடக்கிறேன்
காலில் செருப்போடு..

**பட்டுக்கோட்டை பெ மூர்த்தி**

114

பங்குனிப் புழுக்கம்
நடுங்கியபடி நிற்கின்றான்
வாத்தியார் முன்பு..

**எஸ்.எஸ்.எம்.**



115

பிள்ளையின் பெருமையை
பேசிக் கொண்டிருக்கிறார்கள்
முதியோர் இல்லத்தில்..

**லக்ஷ்மி கார்த்திகேயன்**
சென்னை.





116

பூத்துக்குலுங்கும் மலர்
உதிர்ந்து கொண்டிருக்கிறது
கனத்த மழை..

**தட்சணாமூர்த்தி**

117

கார் முகிலைக் கண்டு
கண் மூடுவதும் திறப்பதுமாய்
பனிப் பொழிவில் பூனை..

**முனைவர் வே. புகழேந்தி.**





118

வயல் வெளியில்
கிடைமட்டமாக கிடக்கிறது
மலையின் நிழல்..

**J.K.பாலாஜி**



119

காலைப் பனிமூட்டம்
விரைவாகத் தரையிறங்கும்
நீர்த்துளிக்காக...

**மீனா கோபி**

120

இனிக்கும் தேன்
இன்னும் கேட்கத் தூண்டுகிறது
தேனீயின் ரீங்காரம்..

**சதா.முருகன்**



121

குழந்தைகளுக்கு மகிழ்ச்சி
பெற்றோரைக் காணும் நாள்
ஞாயிறு விடுமுறை..

**மு.தமிழ்விந்தன்**





122

அமைதியான இரவு
தெளிவாக இருக்கிறது
வெண்ணிலா...

**கவித்துளி சக்தீஸ்வரன்,**
நாமகிரிப்பேட்டை



123

சிறைப் படுகிறது
சிறிதாய் வானம்
மிளிரும் பனித்துளி..

**இளவல் ஹரிஹரன்,**
மதுரை

124

குறைகின்றது மழைவீழ்ச்சி
முகவரிகளை இழந்திடுமோ
வனவிலங்குகள்..!

**வபீரா வபி**



125



கேட்பாரற்ற நிலையில்
விவசாயமும் விவசாயிகளும்
கேள்விக்குறியானது எதிர்காலம்.

**ச.கோபிநாத்**
சேலம்

126

நடவு நடும் பெண்கள்
தலை குனிந்து நிற்கின்றனர்
பட்டுப்போன பயிரால்

**கவிஞர் அ.மாப்பிள்ளைராவுத்தர்**



127

பூவின் வாசம்
காற்றில் பறந்து வருகிறது
தேனீக் கூட்டம்..

**ர.ரகுராமன்**





128

பூங்காவினுள் நுழைந்தவுடன்
அடம்பிடிக்க ஆரம்பமாகிறது
வாய்பேசாக் குழந்தை..

**அ.இலியாஸ் அகமத்**



129

வாசம் வீசும் பூங்கா
பார்க்க கூச்சமாக இருக்கிறது
பங்குனி வெயில்..

**தமிழன் தயா**

130

சிறுவர் பூங்கா
முகம் சுழிக்க வைத்தது
காதலர் செயல்..

**சதீஷ்குமார்**



131

மரக்கிளையில் பறவைகள்
சத்தம் எழுப்புகின்றன
காய்ந்த இலைகள்..

**ம. கமல கண்ணன்**





132

பூக்களே கவனம்
நீளுகிற கைகள்
அணைப்பதற்கா பறிப்பதற்கா..

**ஞால இரவிச்சந்திரன்**

133

பூங்கா நிர்வாகம்
தலையசைத்து வரவேற்கும்
அழகிய மலர்கள்..

**முல்லை நிரோஜன்**





134

அழகிய பூங்கா
அச்சத்தைத் தருகிறது
நுழைவுக் கட்டணம்..

**கவிஞர் - ஜீவா**



135

சூரிய வெப்பம்
பழகிப் போனது
பருவநிலை மாற்றம்..

**வளருங்கவி அமுதன்**

136

இளவேனிற் காலம்
நீண்ட பகல் பொழுதில்
ஆறுதலாக ஆலமரநிழல்..


**கா. சதாசிவம்.**



137

இருண்ட பொழுது
மெல்ல நகர்ந்து செல்கிறது
மக்கள் போராட்டம்..

**றிஸ்வான்**






138

காலை வெயில் வர
முற்றுப் பெறுகிறது
இரவுத் தூக்கம்..

**அன்ரனி சாள்ஸ்**



139

பகலவன் வருகை
ஒளி பெறும் பூமியில்
இருட்டிய வாழ்க்கை..

**பூமகன்**

140

கண்ணாடிக் கதவு
இடை மறைத்துக் கொண்டது
சூரிய ஒளி..

**அபிபம்மா அப்பாஸ்**





141

தலை சாய்ந்த
நெற்கதிர்கள் மிதக்கின்றன
கோடை மழையில்..

**தங்கை பாலா ஆசினி**
சேந்தன்குடி



142

காடு அழிக்கும் நேரம்
குடியிருப்புக்குள் குடிபெயர்ந்தன
வன விலங்குகள்...

**புதுவை க. சரவணன்**



143

வெட்டினோம் மரங்களை
முளைத்துக் கொண்டே இருக்கிறது
புதிய குடியிருப்புகள்..


**கலாநேசன் சரவணன்**
ஹைதராபாத்



144

பறக்கும் தேனீக்கள்
பூக்களை மறைக்கின்றன
காற்றிலாடும் இலைகள்..

**புவனேஸ்வரி சண்**



145

அல்லி முகம்பார்க்கும்
நீரில் நிறைந்திருக்கிறது-
பேரழகு..

**செண்பக ஜெகதீசன்**

146

குளத்து அல்லிமேல்
பட்டுத் தெறிக்கிறது
சூரிய உதயம்..

**செந்தூரன் மீரா**



147

நீர் நிறைந்த குளம்
தாமரை மலர் பூத்துக் குலுங்க
தெரிகிறது கிராமத்தின் வளம்..

**ராஜேஷ்.**





148


அந்தி வெயில்
இளைப்பாறிக் கொண்டிருக்கிறது
தனிமையில் நாற்காலி!

**பசுங்கிளி மணியன்**

149

அமைதியான சூழல்
இன்னும் பசுமை மாறாத
கிராமத்து நினைவுகள்

**மன்னைமணிமாறன்**





150

அழகிய நிலா
அலைந்து திரிகிறது
மேகக்கூட்டம்..

**கே. நிதாஸ்**



151

மார்கழிக் குளிர்
தொழுநோயாளி போர்த்தியிருக்கும்
சுவரொட்டியில் கடவுள்..

**ரா. கணேஷ்**
தேவிப்பட்டினம்

152

பனித்துளியில் பிரபஞ்சம்
தாங்கிப் பிடிக்கிறது
ஒற்றைப் பூவிதழ்..

**சங்கீதா பிரபு (பிச்சிப் பூ)**
திருச்சூர், கேரளா



153

மழைத்துளி பட்டதும்
சிலிர்த்து எழுகின்றன
பூச்சிகள்..

**ஆர்.பூமாதேவி**





154

புத்தம் புது பொலிவுடன்
பளபளப்பாய் இருக்கிறது
வாசிக்கப் படாத புத்தகம்..

**சுதா பிரபாகரன்**



155

மூடு பனி இரவு
தனிமையும் தேநீரும் சூடேற்றுகின்றன
உன் நினைவுகள்..

**ராஜூ ஆரோக்கியசாமி**

156

கலைகின்ற மேகம்
பரந்து காணப்படுகின்றன
பறவைகள் கூட்டம்..

**மணி தியாகேஸ்**





157

அணி வகுக்கும் பறவைகள்
முட்டி மோதிச் சென்றபடி
வானத்து மேகங்கள்..

ஸ்ரீ. ஸ்ரீலக்சன்


158



பறவைகளின் சத்தம்
மௌனமாகப் போகின்றது
முகில்கூட்டம்..

**சிவதர்சினி ராகவன்**

159



கூடுகட்டும் எறும்புகள்
மெல்ல மெல்ல இணைகின்றன
மரத்தின் இலைகள்..

**புன்னகைவேந்தி ஸமான் லாபிர்**



160

பலி ஆட்டின் குரல்
ஓயாமல் கேட்கிறது
கோயில் மணியோசை..

**அருள் பி ஜி**



161

தேவனின் திருச்சபையில்
பாவம் செய்த மனிதர்களை
காத்திருக்கும் பாதிரியார்..

**கலாராணி**

162

சாலை விபத்து
வேகமாய் ஓடுகின்றது
உடைந்த குடிநீர் குழாய்..

**சிவனேஷ் பூசைத்துரை**



163

சாலை விபத்து
தடுத்து நிறுத்தப்படுகிறது
போக்குவரத்து..

**ரமேஷ் கலை மித்ரன்**





164

தனிமையின் கொடுமை
இனிமையாய் இருக்கிறது
பழைய பாடல்..

**சுதேன் சுதேகி**

165

தனிமையில் மனம்
துணையாக வருகின்றது
பழைய நினைவுகள்..

**மகேஸ்வரி கிருஷ்ணசாமி**





166

துணை இழந்த சோகம்
துடிக்கிறது தனிமையில்
பாசம் வைத்த மனம்..

**பாலக்கிருட்டிணன்**
**வண்ணமுத்து**



167

வந்தமர்ந்த பறவையோடு
அழகாய் ஊஞ்சலாடுகிறது
நுனிக்கிளை..

**ச.ப.சண்முகம்**
எழுவாம்பாடி.

168

மலைவாழ் குருவி
தனிமையில் பாடுகிறது
துணையாக எதிரொலி..

**மித்ரா கவிமுத்து**



169

பொங்கிய எரிமலை
நிறம் மாறிக் கொண்டிருக்கும்
நீல வானம்..

**சிவகங்கை கா.கருப்பசாமி**






170

பூமியின் வெப்பம்
வெளியேறி வருகிறது
வெடிக்கும் எரிமலை..

**மும்பை கா.சங்கரன்**



171

மூளியாய் கிடக்கிறது
முப்போகம் விளைந்த வயல்
எரிகிறது விவசாயியின் வயிறு..

**சரஸ்வதி ராசேந்திரன்**

172

புல்லாங் குழலிசை
இடைவிடாது கேட்கிறது
பிள்ளையின் அழுகுரல்..

**கௌரி குலேந்திரன்**





173

இதமான தென்றல்
மனதைக் கவர்ந்து செல்கிறது
புல்லாங் குழலோசை..

**எம்.ஐ.எம்.அஷ்ரப்**

174

இந்தப் புழுக்கத்தில்
ஆடை களைகின்றன
தேருவோர மரங்கள்..

**மு.ஷாக்கீர்**




175

கோடை விழா
குமரிகள் ஏற்றுகின்றனர்
ஐந்துமுக விளக்கு

**எஸ் .நாகலிங்கம்**
தென்னம்பூவயல்





176


காலை உறைபனி
கூடவே ஒட்டியிருக்கிறது
இலையோடு நத்தை..

**விஜிதா**

177

மூங்கில் காட்டில்
எரிந்துகொண்டிருக்கிறது,
நிலா..

**கா. ராம்ஜீ உலகநாதன்**
கோவுஸ்ஸ, எல்ல. இலங்கை



178

மல்லிகை வாசம்
முகர்கையில் மறக்கிறேன்
விதவையர் வாழ்வை

**க.அர. இராசேந்திரன்**



179

அழகான சிலந்திக் கூடு
ஒட்டி இருப்பதால் சிறக்கிறது
பட்ட மரம்..

**பைசர் சுல்தான்**





180

சிங்கத்தைக் கண்டமான்
நிற்காமல் ஓடுகிறது
ஆற்றில் நீர்..

**இ.சதீஸ்குமார்**

181

கொட்டும் மழைச்சாரல்
நடுங்கிக் கொண்டிருக்கும்
நாய்க்குட்டி.

**மு.விஜயசாரதி**





182

சொட்டும் வியர்வை
விரல் நுனியில் தளும்புகிறது
அந்தி வானம்..

**வதிலைபிரபா**



183

மூடிய புல்வெளி
ஆடை களைகின்றன
மொட்டுக்கள்..

**ஆஸாத் கமால்**

184

வானம் இருண்டது
கார்கால மேகம் போல்
வாகனப் புகை அதிகம்..

**வாசன் சாவி**



185

மெல்லிய பூங்காற்று
இடம்விட்டு இடம் மாறுகிறது
இதழ்களில் பனித்துளி..

**ஜிவிதன்**





186

பொழுது விடிந்ததும்
அடிவானில் தெரிகிறது
பின்னிரவு நிலா..

**கண்ணுசாமி பூமாலை**



187

படர்ந்த புல்வெளி
பரவசத்தைத் தருகிறது
படுக்கை அறை..

**கு. ஜெயக்குமாரி - ஜெய்**

188

குளிர் போர்வையானது
மௌனமாய் அழுதபடி
தனிமை...

**சீ.குறிஞ்சிச்செல்வன்**
திருச்சி.





189

மலர்ந்த மொட்டுகளை
மெட்டுக்கட்டிப் பாடிவரும்
வண்டுகளின் ரீங்காரம்...

**பாத்திமா சில்மியா**

190

ஒற்றை மொட்டில்
பல மலர்களும் இலைகளும்
பனித்துளிகளுக்குள்..

**தி.வெண்ணிலா**



191

வெகுதுரித புகைவண்டி
வேகவேகமாக ஓடி மறையும்
மூங்கில் காடுகள்..

**மீராஸ்ரீ**





192

மூங்கில் மரம்
வேகமாக வளர்கின்றது
மரத்தடியில் புற்று..

**கவிதா அசோகன்**
திருச்சி



193

மலையின் விளிம்புக்கு
வண்ணம் பூசுகிறது
மறையும் சூரியன்..

**மகிழ்நன் மறைக்காடு**

194

பனிக்கால விளக்குகள்
நகரத்தின் பாதையெங்கும்
ஒளிப் பாளங்கள்

**முனைவர் ம.ரமேஷ்**



195

மணம் வீசியழைத்து
மகரந்தம் பரிமாறியது
செவ்வந்திப் பூ

**இளயபாரதி, கந்தகப்பூக்கள்**





196

இறுதி ஊர்வலம்
மயானம் தொடுகிறது
பூக்கள் உண்ணும் ஆடு..

**ஹைக்கூ தக்ஷன்**

197

மழைக்குப் பின்னர்
அழகாய் காட்சிதருகிறது
தொடுவானம்..

**யோகேஸ்வரன்கிருஷ்ணவேணி**





198

கடும் பனிமூட்டம்
தயங்கித் தரையிறக்கும்
விமானம்..

**அன்புலதா**



199

ஆடும் வரை ஆட்டம்
ஆடி அடங்கிய பின்
கல்லறைத் தோட்டம்..

**சுமிமுருகன்**

200

இறுதிச் சடங்கு
இடையில் நின்று போகிறது
சொத்துத் தகராறு..

**ஓவியக்கவிஞர் உமாபதி**



201

இறுதி ஊர்வலம்
முன்னே போகிறது
வளர்ப்பு நாய்...

**பிரேம்குமார் பிரஜனா**





202

இதமான குளிர்காற்று
சிலிர்ப்பை உண்டாக்குகிறது
மனைவியின் அரவணைப்பு..

**சி.கேதீஸ்வரன்**



203

விரிந்த மலரில்
அழகாய் இருக்கிறது
தேன் அருந்தும் சிட்டு..

**ஐ.பிரபு**

204

மூங்கில் துளைபுகு தென்றல்
தோற்றுப் போய்விடுகிறது..
குயிலிசை..

**சிவகாமசுந்தரி நாகமணி**
சென்னை





205

கொட்டும் அருவி
நனைந்து போகிறது
இதயம்..

**மணிமொழி லிங்கம்**
மயிலாடுதுறை

206



தூரிகையில் ஒருதுளி
உலகத்தை உருமாற்றும்
சூரிய உதயம்....

**பாண்டியராஜ்**

207



அடர்ந்த புல்வெளி
கடந்து செல்கையில்
நனைந்தபடி கால்சட்டை


**பாண்டிய ராஜ்**
(மீன் கொடி)



208

பனிவிழும் புல்வெளியில்
கவிழ்ந்து கிடக்கின்றது
கூடாரம்..

**ஜெயச்சந்திரன். ப**



209

சூரிய உதயம்
வேரை நோக்கிப் பாய்கிறது
கரையும் பனித்துளி..

**முஹம்மது கியாஸ்**
சவூதி அரேபியா

210

அதிகாலைப் பொழுது
புன்னகைக்கும் குழந்தை
ஆழ்ந்த உறக்கம் ...

**ஹரிகுமார் வேலாயுதன்**



211

ஜன்னலைத் திறந்ததும்
பூக்களின் நறுமணம்
வசந்தகாலத்தை வரவேற்கிறேன்.

**அருணாச்சல சிவா**





212

அழகிய நகர்
குழலூதுகிறான் கண்ணன்
முன்பு மூங்கில் காடு..

**இரா.கி.இராமகிருஷ்ணன்,**
சேலம்.

213

எத்தனை நாதங்கள்
இசைக்கக் காத்திருக்கிறதோ
இந்தக் காட்டு மூங்கில்..

**சுபஸ்ரீ**
பிரான்சு





214

பனிபடர்ந்த ரோஜா
நின்று நிமிர்ந்து பார்க்கும்
ஈர நத்தை..

**பொம்மிடி மோகன்தாஸ்**



215

குளத்தில் எருமைகள்  இறங்கியதும்
ஒருமுறை மூழ்கி நிமிர்கின்றன
தாமரைப் பூக்கள்..

**தி.கி. கமலானந்தன்**
விளாந்தோட்டம்

216

நெருப்பைக் கண்டதும்
முகாரி வாசிக்கின்றது
மூங்கில் காடுகள்..

**கவிஞர் உதய்**




217

அழகான பூவொன்று
தலைகீழாகத் தொங்கியபடி
தேன் குடிக்கும் சிட்டு..

**வேலணையூர் ரஜிந்தன்**





218

காலையிலே கச்சேரி
கலந்துகொள்ள யாருமில்லை
பறவைகளின் சத்தம்

**காவத்தையூர் பழனியாண்டி**



219

உடைந்த ஓடுகள்
நனைந்த படியே இருக்கின்றன
காய்ந்த துணிகள்..!

**ஐ. துஷ்யந்தன்**

220

குளிர் காற்று வீசும் போது
இதமாக இருக்கின்றது
தாயின் அரவணைப்பு..

**ஆர்.றைசா பர்வீன்**





221

மூங்கில் காட்டில்
நகரும் நத்தைகள்
வீடுகளை சுமந்த படி..

**கிரிஜா.தி**

222

எட்டு வழிச்சாலை
விளம்பர பலகைகளில்
பசுமை மரங்கள்...

**கோவை புதியவன்**



223

மொட்டிலிருந்து இடம்மாறிய
பனித்துளி ஒன்று
பூவை நனைத்தது

**வெ.சென்னப்பன்**





224

கானல் நீராய் தெரிகிறது
கிளையிழந்த மரத்தின்
சோகங்கள்...

**நா.பிரகாஷ்**



225

அழகிய ஓவியங்கள்
அடிக்கடி கலைந்து ஓடும்
வெண்பஞ்சு மேகங்கள்

**ஜாக்குலின் என்டன்**
இலங்கை

226



அசைகிறது வானம்
சிறுவன் கையில்
காற்றாடி நூல்..


**ராஜகவி ராகில்**
ஈழம்

227



புல்வெளி மேல் பனித்துளி
பளபளப்பாக மின்னுகிறது
வானில் முழுநிலா..

**சாரதா தேவி**



228

அழகின் சிகரம்
அன்புள்ளங்களின் பறிமாற்றம்
தலையசைக்கும் பூக்கள்..

**ராஜ்பாரதி**

229

பூங்கா புற்களில்
சறுக்கி விளையாடும்
பனித்துளிகள்..

**ரா.ஆகாஷ்கண்ணன்**
பட்டுக்கோட்டை






230

சன்னலோரக் காற்றில்
ஆழ்ந்த உறக்கம் வருகிறது
கணித வகுப்பு..

**சாரதா க. சந்தோஷ்**
ஐதராபாத்



231

பெரும் செலவில்
கடந்து சென்றது ஊர்வலம்
மிதிபடும் பூக்கள்..

**செல்லம்பாலா,**
சென்னை

232

நீர் நிறைந்த வாய்க்கால்
கரை புரண்டு ஓடுகிறது
சிறுவர்களின் உற்சாகம்..

**கலாலோகநாதன்**



233

வெள்ளைக் கொடியில் இரத்தம்
வேடிக்கைப் பார்க்கும்
புத்தர் சிலை

**ஈழபாரதி**
பிரான்சு





234

உயர்ந்த மலைமுகடுகள்
உரசிக்கொண்டு போகும் மேகங்கள்
பள்ளத்தாக்கில் விழும் நிழல்.

**வெற்றிப்பேரொளி**



235

ஆலய தரிசனம்
அருமையாகக் கிடைக்கிறது
முதியவருக்கு உணவு...

**பிரியநிலா,**
வவுனியா, இலங்கை

236

மூடுபனிக் காலம்
திறந்தே இருக்கிறது
தேநீர்க் கடை...

**அசோக் குமரன்**
சென்னை





237

இலவச வேட்டி சேலை
நீண்ட வரிசையில் காத்திருக்கும்
நெசவாளி மகன்.

**காரை. இரா.மேகலா**
காரைக்கால்

238

உணவகத்தில் நுழைய
விரட்டிக் கொண்டிருக்கிறார்
ஈக்களை..


**இதயம் விஜய்**




239

புல்லாங்குழல்  செய்பவனை
வாசனையுடன்  வரவேற்கின்றன
மூங்கில்  பூக்கள்..

**ஜென்ஸி**





240

மங்கிய நிலவொளியில்
பாம்புவாயில் சிக்கிய தவளையின்
இறுதிச் சத்தம்..!

**சோமு . சக்தி**



241

கடல் நீரில்
தாகம் தீர்த்துகொள்கிறது
மேகம்.

**மொஹமெட் சிக்கந்தர்**

242

தென்றல் காற்று
வீசிக்கொண்டே இருக்கிறது
பூவின் வாசம் !

**அருண்சிவா**



243

பட்ட மரங்கள்
அழகாய் தெரிந்தது
வசந்த காலம்.

**சரவிபி ரோசிசந்திரா**





244

உதித்த சூரியன்
உடைந்து வீழ்ந்தது
பனித்துளி

**ஒரத்தநாடு நெப்போலியன்**